www.tamilarangam.net



தோழர் பத்மநாபா

# போர்நிறுத்தமும் பேச்சுவார்த்தையும்

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி

EPRLF

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# போர் நிறுத்தமும் பேச்சு வார்த்தையும்

தோழர் க. பத்மநாபா

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் மத்திய கமிட்டியின் செயலாளர் நாயகம், அதன் அரசியற்குழுவின் தலைவர், மக்கள் விடுதலைப் படையினது ஈழமக்கள் புரட்சிகர இராணுவ ஆணைக்குழுவின் அதிபர்

பிரச்சார செய்திப் பிரிவு

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி
ஜூன் 1985

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

FIRST EDITION

**JUNE 1985**

# ON CEASEFIRE & NEGOTIATION
(TAMIL)

By

Comrade **K. PATHMANABHA**

Secretary general of the Central Committee of EPRLF, Chairman of the Politbureau of EPRLF and the Chairman of Eelam People's Revolutionary Military Commisson.

**Published by**

**INFORMATION & PROPAGANDA WING**
**EELAM PEOPLES REVOLUTIONARY LIBERATION FRONT**

www.tamilarangam.net

## என் பாசமிகு தேசமக்களே!

## தோழர்களே!

ஈழ மக்களின் சுதந்திர வாழ்வுக்காக இன்னல்களையும் இழப்புகளையும் தாங்கிக் கொண்டு ஈழ விடுதலைப் போராட்டப் பாதையில் உறுதியுடன் முன்னேறிக் கொண்டிருக்கும் அன்பிற்கினிய தோழர்களே!

கொடிய ஸ்ரீலங்கா அரசின் கொடூரங்களின் மத்தியிலும் விடாப்பிடியாக ஈழத்தின் விடிவுக்கான போராட்டத்தில் பல்வேறு வகையிலும் பங்காற்றி வரும் ஈழ மக்களே!

இன்றைய கால கட்டத்தின் சூழ்நிலைகள் பற்றியும், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியானது ஈழ விடுதலைப் போராட்டம் தொடர்பாக தற்போது தீர்மானித்துள்ள தந்திரோபாயம் பற்றியும் தெளிவுபடுத்த வேண்டிய கடமையுள்ளவனாக உள்ளேன்.

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியானது தனது சகோதர அமைப்புக்களான தமிழீழ விடுதலை இயக்கம், ஈழப்புரட்சி அமைப்பு, தமிழீழ விடுதலைப் புலிகள் ஆகியவற்றுடன் இணைந்து ஈழ விடுதலைப் போராட்டம் தொடர்பாக ஸ்ரீலங்கா அரசாங்கம் கையாண்டு வரும் ராஜதந்திர நடவடிக்கைகளுக்கு எதிராக 'தற்காலிக யுத்த நிறுத்தம் - பேச்சு வார்த்தை' என்பதனை தீர்மானித்து செயல்படுத்தி வருகின்றது.

ஸ்ரீலங்கா அரசின் போலித்தனங்களையும் பொய்ப் பிரச்சாரங்களையும் நீங்கள் அறிவீர்கள். மேலும் 'யுத்த நிறுத்தம் - பேச்சு வார்த்தை' என்றவுடன் 'பேச்சு வார்த்தை' பற்றிய கடந்த கால அனுபவங்களின் காரணமாக உங்கள் மனதில் பல சந்தேகங்கள், கேள்விகள் எழுவது இயற்கையானதும் எதிர்பார்க்கப்படக்கூடியவையுமே.

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியானது

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஈழ மக்களின் சுதந்திரத்திற்காகவும் உண்மையான முழுமையான ஜனநாயக, சோசலிச ஈழத்தைக் கட்டி எழுப்புவதற்காகவும் போராடி வருகின்றது என்கின்ற விடயத்தில் யாருக்கும், எந்தச் சந்தர்ப்பத்திலும் சந்தேகம் எழ வேண்டியதில்லை.

எமது அமைப்பானது ஈழ விடுதலைப் போராட்டத்தில் ஆற்றியுள்ள தீர்மானகரமான பங்களிப்புகளையும், இப்போராட்டத்தை முன்னெடுப்பதில் மிக உறுதியாகவும், தூர நோக்குப் பார்வையுடனும் செயற்பட்டு வந்துள்ளமையையும், ஈழ மக்களின் சுதந்திர வாழ்வில் நாட்டமும் ஈடுபாடும் உடைய அனைவரும் அறிவர்.

நாங்கள் மிகவும் ஆறுதலாக, அமைதியாக, கடந்த கால பதவிகளின் பயனாகக் கிடைக்கும் சில பலாபலன்களை அனுபவித்துக் கொண்டு சாய்வு நாற்காலி அரசியல் நடத்துபவர்கள் அல்ல...

எமது அமைப்பானது குறுகிய பாராளுமன்ற, முதலாளித்துவ நலன்களுக்காகச் செயற்பட்டு வரும் ஒன்றும் அல்ல...

'ஈழத்தின் விடுதலையே எமது இலக்கு' என்பது எம்மைப் பொறுத்த வரையில் மக்களிடம் வாக்குச் சேகரிப்பதற்கான தேர்தல் கோஷமாக இருந்ததல்ல; அல்லது எமது விருப்பத்திலிருந்து நாம் எடுத்துக் கொண்ட அதிதீவிரவாத சுலோகமோ அல்ல. மாறாக அது எமது விஞ்ஞான பூர்வமான அணுகுமுறையில் விளைந்த தர்க்கபூர்வமான முடிவே ஆகும்.

அதில் எந்தவித மாற்றத்தையும் செய்ய வேண்டிய அவசியம் இன்னும் எமக்கேற்படவில்லை.

ஆயினும், எமது இலக்கை அடைவதற்கான எமது போராட்டப் பாதையானது சுலபமான, நேரான தன்மையைக் கொண்டதல்ல. எமது போராட்டத்தோடு பல்வேறுபட்ட சக்திகள், நிலைமைகள் தொடர்புடையனவாக செயற்பட்டு வருகின்றன.

இவற்றின் விளைவாக எவ்வளவோ நெளிவு சுளிவுகளை, மேடு பள்ளங்களை நாம் சந்திக்க நேரிடுகின்றது. அவ்வாறான சந்தர்ப்பங்களில் மூடத்தனமாக முட்டி மோதி எமது போராட்ட இலக்குக்கு நாமே அழிவு தேடி விடக்கூடாது என்பதில் நாம் மிக நிதானமாக இருந்து செயற்பட வேண்டியுள்ளது.



ஸ்ரீலங்கா அரசாங்கம் தனது ராஜதந்திர நடவடிக்கைகள் மூலம் தனது இனப்படுகொலை நடவடிக்கைகளுக்கும் அரசு, பயங்கரவாதத்திற்கும் உலக நாடுகளிடம் நியாயம் பெறவும், பொருள் ரீதியான ஆதரவுகளைத் தேடவும் முற்படுகின்றது. இதற்கு இடம் கொடாது செயற்பட வேண்டியது எம் முன்னாலுள்ள கட்டாயமான கடமையாகும்.

இலங்கையில் வாழுகின்ற தமிழர்களின் பிரச்சினைக்கு மாற்றுத் தீர்வுகளுக்கான வாய்ப்புகள் இருக்கின்றன எனவும் ஆனால் நாங்கள், அதிதீவிரவாதிகளாக ஈழ விடுதலைப் போராட்டத்தை நடத்தி வருகிறோம் எனவும் உலகில் பலர் கருதுகின்றார்கள்.

உலக நாடுகள் கொண்டிருக்கும் இக்கருத்தை யிட்டு நாம் பாராமுகமாக இருந்து கொண்டு எமது போராட்டத்தை நடத்த முடியாது.

மாறாக இலங்கையில் அவ்வாறான சூழ்நிலை இல்லையென்பதையும், ஈழ விடுதலைப் போராட்டமானது தவிர்க்க முடியாது என்பதையும் நாம் வெவ்வேறுபட்ட ராஜதந்திர, அரசியல் நடவடிக்கைகள் மூலம் நிரூபிப்பதுவும் எமது போராட்டத்தின் ஒரு பகுதி வேலைகளே.

பாலஸ்தீன விடுதலை அமைப்பினதும் (PLO) நமீபிய மக்கள் விடுதலை அமைப்பினதும் (SWAPO) ஆயுதப் போராட்டத்தை அங்கீகரிக்கின்ற உலக நாடுகள் எமது போராட்டத்தை இதுவரை - எந்த நாடும் - அங்கீகரிக்கவில்லை.

இலங்கையில் சமாதான பூர்வமாக ஸ்ரீலங்கா அரசுடன் பேச்சு வார்த்தை நடத்துவதன் மூலம் எமது பிரச்சனைகளுக்கு அரசியல் தீர்வு கண்டு விடலாம் என்று அவர்கள் நம்புகிறார்கள் போலும். இதனால்

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எங்களைப் பார்த்து சமாதானத்துக்கு எதிரான ஆயுதப் பிரியர்கள் என எண்ணுகிறார்கள் போல் தெரிகின்றது.

இதனை மறுத்து நாங்கள் சமாதானத்துக்கு எதிரானவர்கள் அல்ல; சமாதானத்துக்காகவே ஆயுதம் எடுத்துப் போராடுகின்றோம். எமது ஆயுதப் போராட்டம் மூலமே இலங்கையில் சமாதானம் ஏற்பட முடியும் என்பதை தெளிவுபடுத்துவதும் நிரூபிப்பதும் எமது கடமையாகும்.

எமது இன்றைய போக்கின் நோக்கங்கள்.

(1) இது காலவரையும் மாறி மாறி வந்துள்ள ஸ்ரீலங்கா அரசாங்கங்கள் எவ்வளவு தூரம் ஈழ மக்கள் மீது ஒடுக்குமுறை நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்துள்ளன என்பதையும், அதன் விளைவுகளாக இன்று ஈழ மக்களின் நிலை எவ்வாறு உள்ளது என்பதையும்,

(2) 'ஈழம்' தவிர்ந்த வேறெதுவும் ஈழமக்களுக்கு அரசியல் தீர்வாக அமைய மாட்டாது என்பதையும்,

(3) ஆயுதப் போராட்டம் தவிர்த்த வேறெந்த வழியாலும் அதனை அடைய முடியாது என்பதனையும்

உலக நாடுகள் முன்னால் நிரூபித்து எமது ஈழ விடுதலைப் போராட்டத்தை மேலும் உறுதியாகவும் தீவிரமாகவும் முன்னெடுத்துச் செல்வதேயாகும்.

## பேச்சு வார்த்தை பற்றிய எமது நிலைப்பாடு

ஸ்ரீலங்கா அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவது பற்றிய ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் நிலைப்பாடு பற்றி நாம் இந்தியப் பிரதமருக்கு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ள விடயங்களை சுருக்கமாக இங்கு கூற விரும்புகிறேன்.



1. இலங்கையின் தேசிய இனப் பிரச்சினையை பேச்சுவார்த்தை மூலம் தீர்ப்பதற்கு தமிழ் மக்களின் பக்கத்திலிருந்து காலத்துக்குக் காலம் ஒத்துழைப்பு வழங்கப்பட்டன.

ஆனால் சிங்கள அரசாங்கங்கள் தொடர்ச்சியாக ஈழ மக்களை ஏமாற்றியே வந்துள்ளன. அத்துடன் ஈழ மக்களின் மீதான ஒடுக்குமுறையை தொடர்ச்சியாக அதிகரித்தே வந்துள்ளன.

2. 1983-ம் ஆண்டு ஜூலை இனப்படுகொலையைத் தொடர்ந்து பேச்சுவார்த்தை தொடர்பாக இந்திய அரசாங்கம் முன் முயற்சி எடுத்து சில அடிப்படைகளை ஏற்படுத்தி, ஒழுங்கு படுத்திக் கொடுத்த போதிலும் இறுதியில் அப்பேச்சுவார்த்தையும் ஏமாற்றமாகவே முடிவடைந்தது. அது மட்டுமல்லாது பேச்சுவார்த்தையைப் பயன்படுத்திக் கொண்டு ஸ்ரீலங்கா அரசு தன்னை இராணுவ ரீதியில் பலப்படுத்திக் கொண்டது.

3. சமாதானமான முறையில் ஈழ மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு வழி இருக்குமானால் அதற்கு நாங்கள் எதிரானவர்கள் அல்ல.

ஆனால் ஸ்ரீலங்கா அரசாங்கம் இராணுவ ஒடுக்குமுறை மூலமே எமது பிரச்சினைகளை அணுகத் தயாரா இருக்கின்றது என்பதே உண்மையாகும்.

ஆகவே ஈழத்தின் விடுதலைக்காக ஆயுதப் போராட்ட நடவடிக்கைகளை துரிதப் படுத்துவதே ஈழ விடுதலைப் போராட்ட அமைப்புகளுக்கு முன்னாலுள்ள ஒரே வழியாகும்.

4. சர்வதேச உள்நாட்டு காரனிகளின் விளைவாக இந்தியாவைப் பொறுத்த வரையில்,

(1) இலங்கையின் பிரதேச ஒருமைப்பாட்டை அங்கீகரித்தல்.

(2) பேச்சுவார்த்தை மூலமாக ஓர் அரசியற் தீர்வை ஏற்படுத்த முயற்சித்தல் என வெளிப்படுத்தப்பட்டு வரும் கொள்கைகளை நாம் தவறாக விளங்கிக் கொள்ளவில்லை.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

5. ஆனால் அதேவேளை இந்தியாவானது.

(1) ஈழ மக்களின் சுய நிர்ணய உரிமையையும்

(2) ஆயுதந்தாங்கிப் போராடும் அமைப்புகளின் கூட்டமைப்பே ஈழ மக்களின் நியாயாதிக்கமுடைய ஒரே பிரதிநிதித்துவம் என்பதையும்

(3) எந்த வகைப்பட்ட ஒப்பந்தமும் ஈழ மக்களின் மத்தியில் நடத்தப்படும் ஒரு பொது வாக்கெடுப்பு முறையிலான சம்மதத்துடனேயே அமையவேண்டும் என்பதையும்

(4) பேச்சுவார்த்தை என்னும் விடயத்தை ஸ்ரீலங்கா அரசாங்கம் தனது யுத்தத்தின் ஒரு தந்திரோபாயமாகக் கொள்கின்ற படியினால் அவ்வாறானதொரு விடயத்திலும் நாம் ஈடுபடுவதற்கு முன்னர் எமக்கு ஆயுத ரீதியில் உதவி எம்மை இராணுவ ரீதியில் பலப்படுத்த வேண்டும் என்பதையும்

அங்கீகரித்தல் வேண்டும்.

6. ஈழ விடுதலைப் போராட்டம் என்பது இந்தியாவின் நலனுக்கோ, இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் அமைதிக்கோ முரணானதல்ல. மாறாக இந்தியாவின் நலன், ஈழ மக்களின் நலன், இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் அமைதி ஆகிய மூன்று விடயங்களும் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்க முடியாதபடி ஒன்றிணைந்த வகையில் ஒத்திசைவாக உள்ளன.

நாம் குறிப்பிட்டுள்ள விடயங்களை இந்திய அரசு ஏற்றுக் கொள்கிறதோ இல்லையோ ஆனால் நாம் எமது நிலைப்பாட்டை தெளிவாகவும் திட்டவட்டமாகவும் கூறுவது எமது கடமையாகும். இவ்விடயங்கள் இந்தியா அரசாங்கத்துக்கு மட்டுமல்ல உலக நாடுகள் அனைத்தின் முன்னும் நாம் முன் வைக்க வேண்டிய விடயங்களாகும்.

www.tamilarangam.net



## இந்தக் காலக்கட்டத்தில் எமது நிலைப்பாடு சரியா?

ஒரு புறம் எமது ஆயுதப்போராட்டம் தீவிரமடைந்து கொண்டும் அளவு ரீதியில் விரிவடைந்து கொண்டும் இருக்கையில், மறுபுறம் ஸ்ரீலங்கா அரசின் இராணுவ ஒடுக்குமுறையும் அதே தன்மையில் செயற்பட்டுக் கொண்டும் இருக்கையில் நாம் தற்காலிக யுத்த நிறுத்தம்-பேச்சுவார்த்தை என்னும் செயற்முறையைக் கையாள்வது ஈழ விடுதலைப் போராட்டத்தை முன்னோக்கிய பாதையில் செலுத்துமா? அல்லது பின்னிழுக்குமா? என ஒரு கேள்வியை நாமே தொடுத்து அதனை நாம் விரிவாக ஆராய்ந்து பார்க்கலாம்.

## ஸ்ரீலங்கா அரசின் நிலை

ஸ்ரீலங்கா அரசாங்கம் பொருளாதார ரீதியில் பல நெருக்கடிகளுக்கு உள்ளாக்கப்பட்டிருக்கின்றது. அரசியல், இராணுவ, நிர்வாக நிலைமைகள் குறிப்பிடத்தக்க அளவு சீர் குலைந்துள்ளன.

(1) வெளிநாட்டு உதவியில் வீழ்ச்சி,

(2) வெளிநாட்டு வருமானத்தில் வீழ்ச்சி, உறுதியின்மை என்பன பெருமளவு அதிகரித்திருக்கின்றன.

(3) நாட்டில் பொருட்களின் விலைவாசியேற்றம், வேலையின்மை என்பன அதிகரித்துக்கொண்டே செல்கின்றன.

(4) ஈழப்பகுதிகளில் வங்கிகள் நடத்த முடியாத நிலை; இங்கு வரி வசூலிப்பை ஒழுங்காக மேற்கொள்ள முடியாத நிலை, இதனால் உள்நாட்டு வருமானத்தில் உறுதியின்மை.

(5) அர்சாங்கத்திற்கு உள்ளேயும் குத்து வெட்டுகள், அத்துலத் முதலிக்கும் பிரேமதாசாவுக்கும் இடையே

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அடுத்த ஜனாதிபதி யார்? என்ற சண்டை; மலையகத்தில் ஆதிக்கம் பெறும் விடயத்தில் தொண்டமானுக்கும் காமினி திச நாயக்காவுக்குமிடையில் முரண்பாடு. ஜே.ஆர். ஜெயவர்த்தனா இவ்வாறான நிலைமைகளைச் சமாளிக்க முடியாத நிலையில்.

(6) இராணுவச் செலவுகளைக் தொடர்ச்சியாக அதிகரிக்க வேண்டியிருக்கின்றது. ஆனால் அதற்கு ஸ்ரீலங்காவின் பொருளாதார ஆற்றல் இடமளிப்பாக இல்லை.

(7) ஈழத்தில் கட்டாய இராணுவச் சேவை, இதனால் இராணுவத்தில் கட்டுப்பாடின்மை குழப்பங்கள் அதிகரித்துள்ளமை. கடந்த டிசம்பர் மாதத்தில் இராணுவச் சதி மூலம் ஜே.ஆர். ஆட்சியைக் கவிழ்ப்பதற்கான முயற்சிகள் கூட நடைபெற்றன. அந்நிலைமைகள் இன்னும் ஓய்ந்து விடவில்லை.

இதே வேளை இன்னொரு புறம், சர்வதேச ஏகாதிபத்திய பிற்போக்கு சக்திகளின் ஆதரவு நேரடியாகவும் மறைமுகமாகவும் ஸ்ரீலங்கா அரசுக்கு கூடிக்கொண்டே போகின்றது. ஸ்ரீலங்கா அரசு வெளிப்படையாகவே இராணுவ ஆட்சியைப் பிரகடனப்படுத்தும் நிலையை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றது.

ஈழ மக்களின் போராட்டத்தை ஒடுக்கும் தனது முயற்சியில் ஒரு தந்திரோபாயமாக ஈழ மக்களைப் பிளவுபடுத்தி முரண்படுத்தி விடுவதற்கான முயற்சிகளை ஸ்ரீலங்கா அரசாங்கம் அடிக்கடி மேற்கொண்டிருக்கின்றது.

அந்த அடிப்படையில் ஸ்ரீலங்கா அரசாங்கம் எடுத்த முயற்சிகள் அனைத்தும் தோல்வியிலேயே முடிவடைந்துள்ளன. ஆனாலும் அம் முயற்சிகளை



இன்னும் கைவிட்டு விடவில்லை. வெவ்வேறு வழிகளில் அதற்காக முயற்சித்துக் கொண்டேயிருக்கின்றது.

அது மட்டுமல்லாது, ஈழ மக்களுக்கு எதிராக சிங்கள மக்களைத் தூண்டிவிடுகின்ற விடயத்திலும் அரசாங்கம் படிப்படியாக தோல்வியை எதிர்நோக்கி வருகின்றது. எனினும் சிங்கள மக்களில் மிகப் பெரும்பான்மையானோர் ஈழ விடுதலைப் போராட்டத்தின் சரியான நியாயங்களை இன்னும் விளங்கிக் கொள்ளாதவர்களாகவே உள்ளனர். இதனை ஸ்ரீலங்கா அரசாங்கம் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தி வருகின்றது.

மேலும் கடந்த காலங்களில் 'பயங்கரவாதத்தை' ஒழிப்பதே தனது முதல் வேலை என்று வீராப்புப் பேசிக் கொண்டிருந்த ஸ்ரீலங்கா நவபாசிச அரசாங்கம் பின்னர் ஈழ விடுதலை போராளிகளுடன்தான் சமாதான பேச்சு வார்த்தை நடத்துவதற்கு இந்தியா ஒழுங்குபடுத்தி தரவேண்டும் என ஒரு போலித்தனமான சுலோகத்தை தூக்கியது. சர்வதேச ஜனநாயக சக்திகள் முன்னால் இச்சுலோகத்தை முன் வைப்பதன் மூலம் தான் ஒரு 'நியாயமான சமாதான பிரியன்' போலவும் நாங்களே 'இரத்த வெறியர்கள்' எந்த சமாதான முயற்சியையும் மறுக்கும் போக்குடையவர்கள் போலவும் சித்தரித்துக் காட்டி எம்மை ராஜதந்திர ரீதியில் முறியடித்து விட முயற்சி செய்தது. அத்துடன் ஈழ மக்களுடன் நட்புறவு கொண்டிருக்கும் இந்திய அரசின் இறுக்கமான நிலைப்பாட்டையும் ராஜதந்திர ரீதியில் மடக்கி விடலாம் எனவும் கனவு கண்டது.

இந்த விடயத்தில் ஸ்ரீலங்கா அரசாங்கம் முதலாவது தோல்வியைத் தழுவிக் கொண்டதை இந்த இடத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இதே வேளை ஸ்ரீலங்கா பேரினவாத வெறிபிடித்த அரசாங்கம் காலத்துக்குக் காலம் கடைப்பிடித்து வரும் பேச்சு வார்த்தை நாடகத் தந்திரோபாயத்தின் கள்ளத்தனமான நோக்கங்களை நாம் புரியாதவர்களல்ல.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஸ்ரீலங்கா அரசின் இன்றைய 'யுத்த நிறுத்த-பேச்சு வார்த்தை' தந்திரோபாயத்தின் உள்நோக்கங்களாவன:-

(1) எமது ஆயுதப் போராட்ட நடவடிக்கைகள் தீவிப்படுத்தப்படுவதைக் காலம் தாழ்த்துவது,

(2) இராணுவ ரீதியிலும், அரசியல் பொருளாதார ரீதியிலும் இக்கால இடைவெளியைப் பயன்படுத்தி தன்னை பலப்படுத்திக் கொள்வது/

(3) தமிழ் மக்கள் மத்தியிலுள்ள பிற்போக்கு சக்திகளை மீண்டும் பலப்படுத்தி விடுவது.

ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் படுபிற்போக்குத்தனமான நோக்கங்களை நாம் தெளிவாகப் புரிந்து கொண்டவர்களேயாயினும் அதனை நாமும் ராஜதந்திர ரீதியிலேயே அணுகுவது ஈழ மக்களின் நலன்களுக்கு அவசியமானதாக உள்ளது.

## ஈழ விடுதலைப் போராட்டத்தில் இந்தியாவின் பங்கு.

எமது போராட்டத்தில் இந்தியாவின் பங்கு என்ன என்பதையும் எமக்கும் இந்தியாவுக்குமிடையில் நிலவுகின்ற நட்புறவின் முக்கியத்துவம் பற்றியும் இங்கு நான் குறிப்பிடுவது அவசியமாக உள்ளது. அது எமது இன்றைய தீர்மானத்தை நன்கு தெளிவாக விளங்கிக் கொள்ள உதவியாக இருக்கும்.

1. ஈழ விடுதலை போராட்டத்திற்கு ஆதரவாக இந்தியா எவ்வளவு தூரம் செயற்பட்டு வந்துள்ளது என்பதை அனைவரும் அறிவீர்கள்.

   இந்தியா கொள்கை ரீதியில் எமது போராட்டத்தை இதுவரை அங்கீகரிக்காதிருக்கலாம். ஆனால் இந்தியா மனித உரிமைகள் என்ற அடிப்படையில்' வழங்கி வந்துள்ள ஆதரவானது



ஈழ விடுதலை போராட்டத்தை உயர்ந்த கட்டத்தினை நோக்கி, நகர்த்துவதற்கு உதவியாக இருந்திருக்கின்றது என்பதனை நாம் மறந்து விடக்கூடாது.

2. சர்வதேச ரீதியில் இந்திய அரசானது எந்த ஒரு முகாமையும் சேர்ந்ததாக இல்லாவிடினும், அது சர்வதேச விடயங்களில் சோஷலிச நாடுகளினதும் குறைவிருத்தி நாடுகளினதும் பக்கமே நிற்கின்றது.

   அனைத்து சோஷலிச நாடுகளும் பெரும்பான்மையான குறைவிருத்தி நாடுகளும் இந்தியாவுடனான நட்புறவுக்கு மிகுந்து முக்கியத்துவம் கொடுத்து வருகின்றன.

   இதே வேளை அபிவிருத்தியடைந்த முதலாளித்துவ நாடுகள்கூட அரசியல் ராஜதந்திர ரீதியில் இந்தியாவை பகைத்துக் கொள்ள தயாராக இல்லை.

   சர்வதேச ரீதியில் அதுவும் முக்கியமாக இந்திய உப கண்டத்தில் இந்தியாவின் முக்கியத்துவம் முன்னிலையில் நிற்கின்றது.

   எமது போராட்டத்திற்கும் உலக நாடுகளுக்கும் இடையே இருக்க வேண்டிய— இருக்கக்கூடிய உறவு பற்றிய எமது மதிப்பீட்டாய்வில் இந்தியா பற்றிய மேற்குறிப்பிட்ட விடயங்கள் மிகவும் கவனத்திற்குரியவையாகும்.

3. ஈழ விடுதலை போராட்டத்திற்கு இருக்கின்ற மிகப் பெரிய பலம் ஈழ மக்களுக்கும் இந்தியாவுக்கும் இடையே உள்ள நட்புறவே ஆகும். இந்தியாவின் நட்புறவை நாம் பேணுவதற்கு சில வேளைகளில் சில தற்காலிக விட்டுக் கொடுப்புக்களை செய்ய வேண்டியிருக்கும்; சில நட்டங்களையும்கூட ஏற்றுச் செயற்பட வேண்டியிருக்கும்.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆனால் நாம் ஓரடி பின்னால் செல்வதென்பது ஈரடி முன்னால் செல்வதற்கே என்பதை ஒவ்வொருவரும் மனதிற் கொள்ளும்படி வேண்டிக் கொள்கின்றேன்.

4. ஈழ விடுதலை போராட்டத்திற்கும் இந்தியாவிற்கும் இடையே இருக்கக்கூடிய——இருக்க வேண்டிய உறவு தொடர்பாக ஸ்ரீலங்கா அரசு தான் நடாத்தி வரும் பிரச்சாரங்களின் மூலம் அது ராஜதந்திர ரீதியிலான எதிர்ப்புத் தாக்குதல் நிலையைகொண்டிருக்கின்றது.

ஸ்ரீலங்காவின் பிரச்சாரத்திற்கு எதிராக நாமும் சரி, இந்திய அரசும் சரி தற்பாதுகாப்பு நிலையையே கொண்டிருக்கின்றோம்.

ஸ்ரீலங்கா அரசாங்கம் தனது திறமையான பிரச்சாரம் மூலம் இந்தியாவோ அல்லது ஏனைய நாடுகளோ எமது போராட்டத்திற்கு அரசியல், ராணுவ, ராஜதந்திர ரீதியில் உதவி செய்து விடாமல் காத்து வருகின்றது.

இவ்வளவு தூரம் அரக்கத்தனமான கொடூரங்களை புரிந்த—— புரிந்துக் கொண்டிருக்கின்ற ஸ்ரீலங்கா நவபாசிஸ்டுக்கள் இந்த ஒரு விடயத்தில் கெட்டித்தனமாக இருப்பதை நாம் தொடர்ந்தும் அனுமதிக்காது, அவர்களின் நிலையைத் தலைகீழாக மாற்றியமைக்க வேண்டியது எமது போராட்டத்திற்கு மிக அவசியமாக உள்ளது.

5. 'இந்தியாவின் நட்பையும் மீறி நாங்கள் போராடுவோம்' என்று யாராவது கூறுவார்களாயின், அது எமது இன்றைய யதார்த்தத்துக்குப் புறம்பான அதீத துணிச்சல் மனோபாவத்தின் வெளிப்பாடேயாகும்.

அவ்வாறான நினைப்பானது ஒன்றில் எம்மை அழிவுப்பாதைக்கு இட்டுச் செல்லும் அல்லது



நீண்ட கால. அடிப்படையில் ஈழப் போராளிகளை சர்வதேச பிற்போக்குவாதிகளின் கையில் வீழ்த்திவிடும்.

சர்வதேச ரீதியில் ஈழ விடுதலைப் போராட்டம் இன்று வகித்து வரும் முற்போக்கான பாத்திரத்தை தொடர்ந்தும் வகிக்க வேண்டுமாயின் ஏகாதிபத்தியத்துக்கு எதிராக இந்தியா இன்று கொண்டிருக்கும் சர்வதேச நிலைப்பாட்டை மாற்றாத வரை நாமும் அதனோடு நட்புறவுடன் இருப்பது அவசியமாகும்.

6. தமிழ்நாட்டு மக்கள் எமது போராட்டத்திற்கு பேருதவியாக இருந்து வந்திருக்கின்றனர்.——இன்றும் இருந்து வருகின்றனர்.

கொடிய ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் நடவடிக்கைகளின் விளைவாக அதனோடு நாங்கள் யுத்த நிறுத்தம்——பேச்சு வார்த்தை என ஈடுபடும்போது தமிழ்நாட்டு மக்கள் எம்மீது சில சந்தேகங்கள் கொள்ள இடம் இருக்கின்றது என்பதை உணர்கிறேன்.

எனினும், நாங்கள் இதுவரை கடந்து வந்துள்ள கடூரமான பாதைகள், செய்து வந்துள்ள தியாகங்கள், ஈழ விடுதலை போராட்டத்தில் நாம் கொண்டுள்ள உறுதி என்பன தமிழ்நாட்டு மக்களிடம் எழுந்திருக்கக்கூடிய அச்சந்தேகங்களை மிகக்குறுகிய காலத்தல் நீக்கும் என நான் திடமாக நம்புகின்றேன்.

இவ்விடயத்தில் தமிழகத்தின் தலைவர்களும் மற்றும் சமூக முக்கியத்துவம் வாய்ந்த அனைவரும் எமக்கு ஒத்தாசையாக இருக்க வேண்டும் என்பது எனது தாழ்மையான வேண்டுகோள் ஆகும்.

ஈழ மக்களின் நலனும், இந்தியாவின் நலனும் முரண்பாடற்றதாக இருக்கும்வரை ஈழ விடுதலை போராட்டத்தையும் இந்திய நட்புறவையும் முரண்

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பாடடைய விடாமல் பாதுகாத்துக் கொள்வது எமது தலையாய கடமையாகும்.

## ஈழ விடுதலை அமைப்புக்களின் நிலை

ஈழ விடுதலை அமைப்புகளின் நிலையிலிருந்து சில விடயங்களை கூற விரும்புகின்றேன்.

(1) ஆயுதந் தாங்கிப் போராடுகின்ற ஈழ விடுதலை அமைப்புக்களே உண்மையில் ஈழ மக்களின் தேவைகளையும், விருப்பங்களையும் பிரதிநித்துவப்படுத்துகின்றன. ஆனால் எந்த ஒரு ஈழ விடுதலை அமைப்பாயினும் சரி தனது பிரதிநித்துவத்துக்கான நியாயாதிக்கத்தை முதலாளித்துவ ஜனநாயக முறைகளின் ஊடாக பெற்றுக் கொண்டதாக இல்லை. ஈழ விடுதலை போராட்ட அமைப்புக்களில் ஒன்றிற்கோ அல்லது கூட்டமைப்புக்கோ இதுவரை சர்வதேச அரசியல் அங்கீகாரம்——எந்தவொரு நாட்டிலிருந்தும்——கிடைக்கவில்லையென்பது புறநிலையான——வெளிப்படையான உண்மையாகும்.

(2) சர்வதேச முற்போக்கு, ஜனநாயக, பாட்டாளி வர்க்க சக்திகள் எமது போராட்டத்தின் நியாயப் பூர்வமான காரணங்களே ஏற்றுக் கொள்கின்ற போதிலும் 'ஈழ விடுதலையே தீர்வு' என்பதை ஏற்றுக் கொள்ள தயங்குகின்றனர்.

அவர்கள் ஈழ மக்களின் பிரச்சினைகளை வேறு முறைகளினாலும் தீர்க்க முடியும் என நம்புகின்றனர். அவர்களின் இந்நம்பிக்கையை விவாதங்களின் மூலம் நீக்க முடியாதுள்ளது. இதனால் ஈழ விடுதலை தவிர்ந்த வேறெந்த மாற்றுத் தீர்வையும் இலங்கையில் கொண்டு வர முடியாது என்பதை



நாம் சில நடைமுறைகள் மூலமும் நிருபித்தாக வேண்டியுள்ளது.

(3) சர்வசேத சக்திகளுக்கு அவ்வாறு ஏன் நாம் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று பலர் கேள்வி எழுப்பக்கூடும்

எமது போராட்டமானது சர்வதேச ரீதியில் அமைதிக்காகவும் சமத்துவத்திற்காகவும் ஜனநாயகத்திற்காகவும் நடைபெறும் போராட்டங்களின் ஒரு பகுதியே என்பது ஒருபுறமிருக்க,

ஈழ மக்களினதும் ஈழ விடுதலை போராளிகளினது ஆர்வமும் ஆற்றலும் தியாகமும் இதுவரை ஈழ விடுதலை போராட்டத்தை முன்னோக்கி செலுத்தியுள்ளன என்பது உண்மைதான்.

ஆயினும் எமது போராட்டத்தின் வடிவங்களையும் உள்ளடக்கங்களையும் பண்பு ரீதியான மாற்றத்துக்கு உட்படுத்தி இன்னொரு உயர்ந்த கட்டத்திற்கு எடுத்துச் செல்வதற்கு சர்வதேச சக்திகளின் அரசியல், ராணுவ, ராஜதந்திர ஆதரவுகள் தேவைப்படுகின்றன.

அதற்கு, எமது போராட்டமும் போராடுகின்ற அமைப்புக்களும் சர்வதேச அங்கீகாரத்தை பெறுவதற்கான மாற்று வேலை திட்டங்களிலும் ஈடுபட்டாக வேண்டியுள்ளது. அவையும் போராட்டத்தின் பகுதிகளே.

(4) ஈழ விடுதலை அமைப்புக்கள் யுத்த நிறுத்தம்——பேச்சு வார்த்தை என ஈடுபடுமாயின் அது எவ்வாறு கடந்த காலத்தில் தமிழ் பாராளுமன்ற அரசியல்வாதிகள் நடந்து கொண்டதிலிருந்து வேறுபடும்? என சிலர் கேள்வி எழுப்பலாம்.

முதலாவது விடயம் இது ஒரு தற்காலிக யுத்த நிறுத்தமே,

இரண்டாவது, நாங்கள் ஆயுதங்களை கீழே

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



போட்டு விடவில்லை. எம்மிடம் உள்ள ஆயுதங்களுக்கு தற்காலிக ஓய்வு மட்டுமே கொடுத்திருக்கிறோம்.

எக்காரணம் கொண்டாயினும் ஸ்ரீலங்கா அரசாங்கம் எமக்களித்துள்ள வாக்குறுதியை மீறுமாயின் எமது ஆயுதங்கள் எதிரிகளின் மீது பாயும்.

மூன்றாவது, ஸ்ரீலங்கா அரசாங்கம் இக்கால இடைவெளியை பயன்படுத்திக் கொண்டு தன்னை பலப்படுத்திக் கொள்ள முயலுமாயின் நாங்களும் எம்மை அனைத்து வழிகளிலும் பலப்படுத்திக் கொள்வோம்.

நான்காவது, வரையறுக்கப்பட்ட கால இடைவெளிக்குள் ஸ்ரீலங்கா அரசாங்கம் தான் ஒத்துக்கொண்டபடி ஈழ மக்களுக்கான முழுமையான அரசியல் தீர்வை முன் வைத்து நடைமுறைப்படுத்த தவறுமாயின் எமது ஆயுதப் போராட்டம் மீண்டும் முன்னரைவிட மிகத் தீவிரமாக முன்னெடுக்கப்படும்.

இந்த அடிப்படை விடயங்களை யாரும் கவனத்திற்கொள்ள தவறக்கூடாது.

(5) பேச்சு வார்த்தை என்று சொன்னால் அது ஈழ விடுதலையைப் பற்றி நடைபெற முடியாது தானே! மாற்றுத் தீர்வைப் பற்றித் தானே! அப்படியாயின் ஈழ விடுதலை அமைப்புக்கள் ஈழத்தைக் கைவிட்டதாகத் தானே அர்த்தம்!, என்று சிலர் வினாத் தொடுக்கக்கூடும்.

அப்படிப்பட்டவர்களுக்கு நாம் கூறும் பதில் என்னவெனில், பேரின வாத ஸ்ரீலங்கா நவபாசிச முதலாளித்துவ அரசினால் இன்று இலங்கையில் நிலவுகின்ற தேசிய இன முரண்பாட்டுக்கு தீர்வு காண முடியாது என்பது ஒன்று,

இரண்டாவது அந்த நல்லெண்ணம் ஸ்ரீலங்கா அரசாங்கத்திற்கு ஏதாவதொரு மூலையிலாவது



ஏற்பட்டிருப்பதற்கான குணங் குறிகளை எங்கேயாவது பார்க்க முடிகின்றதா?

கடந்த அறுபது ஆண்டுகளுக்கு மேலாக வளர்த்து விடப்பட்டுள்ள சிங்களப் பெருந்தேசிய இனவெறியையும் அதன் விளைவுகளையும் பின்னோக்கி இழுத்துவிட ஸ்ரீலங்காவின் முதலாளித்துவ அமைப்பினால் முடியாது.

இவை ஒரு புறமிருக்க, சரி! இன்னொரு வகையில்தான் பார்ப்போமே! ஸ்ரீலங்கா அரசாங்கம் ஈழ விடுதலைக்கு மாறான முறைகளில் தமிழர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டுவிடும் என்று யாராவது நம்புவார்களாக இருந்தால்,

அதற்கென்ன! தீர்க்கட்டுமே! அதற்காகத்தான் இப்போது சந்தர்ப்பம் கொடுத்திருக்கிறோமே! எங்கே தீர்த்துக் காட்டட்டும் பார்ப்போமே!

நாங்கள் யாரும் பிரிவினை வெறியர்கள் அல்ல. எங்களுக்குத் தேவை சுதந்திரம், அமைதி, சம அந்தஸ்த்து, பாதுகாப்பு, நாங்களும் மனிதர்களே என்பதற்கான கௌரவம் என்பவைதான்.

இவற்றை நாம் ஈழவிடுதலை தவிர்ந்த வேறெந்த வழியாலும் அடைய முடியாது என்றுதான் கூறுகின்றோம். இதை எமது விருப்பத்திலிருந்து எழுந்த அடிப்படையில்லாத கருத்து அல்ல. மாறாக இது இலங்கை தீவின் புறநிலை யதார்த்தம் பற்றிய எமது விஞ்ஞான பூர்வமான ஆய்விலிருந்து விளைந்த உறுதியான முடிவே ஆகும்.

ஸ்ரீலங்கா அரசாங்கம் கடந்த காலத்தில் தமிழ் பாராளுமன்ற வாதிகளுடன் நடந்து கொண்டது போல நடந்து எம்மையும் ஏமாற்றி விடலாம் என்று நினைத்தால் அது நடக்காது.

நாங்கள் எங்கள் ஆயுதங்களை எந்த நேரத்திலும் ஆயத்தமாகத்தான் வைத்திருக்கின்றோம்.

நாம் பிரிவினை வெறியர்களோ, பயங்கரவா

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

திகளோ அல்ல, சிங்கள பௌத்த பேரினவாத வெறியினால் ஒடுக்கப்பட்ட நாற்பது லட்சத்துக்கு மேற்பட்ட ஈழ மக்களின் சுதந்திரத்துக்காகவும், சம அந்தஸ்துக்காகவும், அமைதிக்காகவும், கௌரவத்துக்காகவும், ஜனநாயக உரிமைகளுக்காகவும் போராடுகின்ற நியாய மான போராளிகள்என்பதை நிரூபிப்பதற்காகவே இந்த தற்காலிக யுத்த நிறுத்தம்-பேச்சு வார்த்தை என்னும் செயல்முறையைக் கடைப்பிடிக்கிறோம்.

(6) மேலும் சிலர், 'இந்தியா தன்னுடைய நலனுக்காகவே தற்காலிக யுத்த நிறுத்தம்-பேச்சு வார்த்தை என்பதை ஈழவிடுதலை அமைப்புக்கள் மீது திணித்துள்ளது. எனவே இந்தியாவை மீறி ஈழ விடுதலைப் போராட்டத்தைக் கொண்டு போக வேண்டும்' என்று எல்லாம் தெரிந்தவர்கள் போல கெட்டித்தனமாக வாதிட முற்படுகின்றனர்.

இந்தியா எம்மீது இவ்விடயத்தை திணித்ததா? இல்லையா? என்பது பற்றிய விளக்கம் ஒரு புறமிருக்கட்டும்.

மேலே கூறப்பட்டது போல இந்தியா தன்னுடைய நலனின் நோக்கிலிருந்து பார்த்தது என்றே வைத்துக் கொள்வோமே, அதில் என்ன தவறு.

இங்கு ஒரு முக்கிய விடயத்தைக் கூறி வைக்க வேண்டியவனாக இருக்கிறேன். முதலாவதாக ஈழ விடுதலை அமைப்புகள் இந்தியாவின் நட்புறவை மீறிச் செயற்படும் பட்சத்தில் சர்வதேச முற்போக்கு, ஜனநாயக, பாட்டாளி வர்க்க சக்திகளின் ஆதரவை பெற முடியாது, என்பதோடு ஈழ மக்களும் அதனை விரும்ப மாட்டார்கள்.

இந்தியா மீது ஈழமக்கள் எவ்வளவு நம்பிக்கையும் ஆத்மார்த்தமான அந்நியோன்ய உணர்வும் கொண்டிருக்கின்றனர், என்பதையும் அனைவரும் அறிவர்.

www.tamilarangam.net



இரண்டாவதாக, ஈழ மக்களின் நலனும் இந்திய நலனும் இன்றைய கால கட்டத்தில் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்கப்பட முடியாதவையாக ஒன்றுக்கொன்று முரணற்றவையாக உள்ளன.

இவ்வாறான நிலைமையின்போது ஈழ விடுதலை அமைப்புகள் இந்தியாவின் நட்பை மீறிச் செயற்பட முற்படுமாக இருந்தால் இது இன்றைய எதார்த்தத்தின் தேவைக்கு முரண்பாடானதாகவே இருக்கும்.

ஸ்ரீலங்கா அரசு எமக்கும் இந்தியாவுக்குமிடையில் நிலவும் நட்புறவை துண்டாடுவதற்கும், முரண்படுத்துவதற்கும் அரும்பாடுபட்டு வருகின்றது. ஸ்ரீலங்கா அரசின் இந்த கெட்ட நோக்கத்தை நடைமுறைப்படுத்தி விடுபவர்களாக ஈழவிடுதலை அமைப்புகள் எதுவும் இந்தக் காலகட்டத்தில் செயற்பட்டு விடக்கூடாது என்பது எனது பணிவான வேண்டுகோள் ஆகும்.

(7) இதே வேளை இந்திய அரசாங்கமும், ஈழ மக்களின் நலனுக்கும், இந்தியாவின் நலனுக்கும் இந்திய சமுத்திரப் பிராந்திய அமைதிக்குமிடையே உள்ள பிரிக்க முடியாத ஒருமைப்பட்ட உறவை சரியாக அடையாளம் கண்டு அதற்குக் தக்கபடி செயற்படுவது அவசியமாகும்.

சமாதானம் என்ற பெயரில் மேற்கூறப்பட்டவற்றில் ஒன்றுக்கோ அல்லது மூன்றுக்குமோ பாதகம் ஏற்படாத வகையில் செயற் பட வேண்டும் என்பது எனது கருத்து ஆகும்.

இவ்வடிப்படையில் எமது மக்களின் நலனுக்காக இந்திய அரசை பல்வேறு வகையிலும் நட்பு ரீதியில் வலியுறுத்துவது ஈழ விடுதலை அமைப்புகள் ஒவ்வொன்றினதும் கடமையாகும்.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



(8) ஈழ விடுதலை அமைப்புகள் பற்றிய விடயத்தில் மற்றொரு பிரதான விடயம் என்னவெனில்,

ஈழ விடுதலைப் போராட்டத்தில் எந்த ஒரு தனி அமைப்பும் ஆதிக்கம் வகிப்பதாக இல்லை எனவே ஈழ விடுதலை அமைப்புகள் கூட்டமைப் பாகவே செயற்பட வேண்டியுள்ளன.

போராட்டத் திட்டங்கள் செயல்முறைகள் பற்றிய விடயத்தில் அடிப்படையான பொதுப் போக்குகளை அனைத்து அமைப்புகளும் கடைப் பிடிப்பது அவசியமாகும்.

இதில் யாராவது இடறுப்படுவார்களாயின் அது எமது போராட்ட இலக்குக்கே ஆபத்தாக முடியும் என எச்சரிக்க விரும்புகிறேன்.

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியைப் பொறுத்த வரையில் எமது போராட்டத்தின் இன்றைய கால கட்டத்தில் ஐக்கிய முன்னணிக்கே முன்னுரிமை கொடுக்கின்றோம்.

ஈழ விடுதலை அமைப்புகள் கருத்து முரண்பாடுகள், ஒற்றுமையின்மைகளுக்கு ஆட்பட்டுப் போயிருந்த காலங்களில் ஈழ மக்களும் சர்வதேச நட்பு சக்திகளும் எவ்வளவு வேதனைப்பட்டார்கள் என்பதை நானறிவேன்.

அதேவேளை இன்று எம் மத்தியில் உள்ள ஐக்கியத்தைக் கண்டு எவ்வளவு மகிழ்கிறார்கள் என்பதையும் நான் காண்கின்றேன்.

இச்சந்தர்ப்பத்தில், ஈழ விடுதலைப் போராட்டத்தில் மிகப் பெரும் பங்கையாற்றி வருகின்ற தமிழீழ விடுதலை இயக்கம் தமிழீழ விடுதலைப் புலிகள் ஈழப்புரட்சி அமைப்பு, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி ஆகிய நான்கு அமைப்புகளும் ஐக்கியப்பட்ட ரீதியில் செயற்படுவதற்கே முக்கியத்துவம் கொடுத்து வருகின்றன.



இன்றைய தற்காலிக யுத்த நிறுத்தம்-பேச்சு வார்த்தை செயன்முறை என்பது எமது ஐக்கிய முன்னணியின் முடிவே என்பதை நான் பெருமையுடன் கூறிக்கொள்கிறேன்.

இதில் எந்த ஒரு தனிப்பட்ட அமைப்புக்கும் தனிப்பட்ட போக்கோ தீர்மானமோ இருக்காது என்பது எனது திடமான நம்பிக்கையாகும்.

இதே வேளை ஸ்ரீலங்கா அரசாங்கத்தை அரசியல், ராணுவ, ராஜ தந்திர ரீதியில் எதிர்நோக்குவதில் நான்கு அமைப்புகளும் உறுதியாக இருக்கின்றன என்பதையும் பெருமிதத்துடன் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

என்பாசமிகு தேச மக்களே,
அன்புமிக்க தோழர்களே,

**எமது தாயகத்தை கொடியவர்களின் பிடியில் இருந்து மீட்டெடுக்கும் போராட்ட பாதையின் ஒரு பிரதான கட்டத்தின் செயல்முறையில் இன்று நாம் செயற்பட்டுக் கொண்டு இருக்கின்றோம்.**

**தற்காலிக போர் நிறுத்தம்-பேச்சு வார்த்தை என்னும் செயல்முறை பற்றிய பல விடயங்களை இது வரையில் விளக்கி உள்ளேன். எமது தற்போதைய நடைமுறை பற்றி தெளிவாக விளங்கிக் கொள்வீர்கள் என நான் நம்புகிறேன்.**

**இருப்பினும் எமது போராட்டத்திற்கு எதிரான சில தீய சக்திகள் இந்தச் சந்தர்ப்பத்தில் நல்லவர்கள் போல் நடித்து உங்கள் சிந்தனைகளை குழப்பமுறப்படுவார்கள்.**

**அவ்வேளைகளில் நீங்கள் மிகவும் எச்சரிக்கையாகவும், விழிப்போடும் இருந்து கொள்ள வேண்டும் என்று உங்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.**

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எமது விடுதலைப் போராட்டமானது தவிர்க்க முடியாதபடி நீண்ட கால தற்காப்புக் போராட்டமா கவே அமைவதை நாம் இனம் கண்டு கொள்ள வேண்டும்.

எனவே அப்பாதையில் நாம் சரியாகவும், திறமையாகவும் செயற்பட்டாக வேண்டும்.

எமது போராட்டத்தின் காலப் போக்கின் அளவினை சரியாகக் கணிப்பிட்டு அதற்கேற்றபடி செயல்படவில்லை என்றால் எதிரியின் நோக்கங்க ளுக்கு நாம் இரையாக வேண்டிய நிலை ஏற்ப டும்.

எமது போராட்டத்தின் பாதையானது சற்று நீளமானதும், கரடுமுரடானதும், பல துன்பங்க ளை விளைவிக்கக்கூடியதுமானதாகும். ஆயினும் இப் பாதையில் தொடர்ந்தும் நாம் எமது பய ணத்தை மேற்கொள்வது தவிர்க்க முடியாததே.

கடந்த இரண்டு ஆண்டுகளாக தொடர்ச்சியாக பல வேதனைகளையும், சோதனைகளையும் தாங் கிக் கொண்டு ஈழ மக்கள் எம்மோடு போராட்டத்தில் பங்கு பற்றி வந்துள்ளனர்.

இப்போராட்டப் பாதையில் தொடர்ந்தும் நாம் முன்னேறிச் செல்வதற்கு ஈழ தேச மக்களுக்கு சற்று ஓய்வும், சிறிது நிம்மதியான நித்திரையும் தேவைப்படு கின்றது. அதே வேளை எமது போராட்டத்திற்கான சில அடிப்படையான சேகரிப்புகளையும், தயாரிப்புக ளையும் நாம் மேற்கொள்ள வேண்டியும் உள்ளது.

இந்நோக்கங்களையும் கருதியே தற்காலிக போர் நிறுத்தம்-பேச்சு வார்த்தை என்னும் செயல் முறைக் கான திர்மானங்களை நாம், செயற்படுத்தி வருகின் றோம்.

இவ்இடைநேர வேளை ஓய்வின் பின்னர் மீண்டும் எமது போராட்டப் பயணத்தை தொடர்வது தவிர்க்க முடியாததாகவே இருக்கும் என்பது நாம் முன்கூட்டி யே எதிர்நோக்கும் முடிவாகும்.



எனவே இக்கால இடைவெளியை ஈழ மக்கள் எவ்வளவு தூரம் எதிர் காலத் தேவைகளுக்காக பயன்படுத்திக் கொள்ள வேண்டுமோ அதனை தவ றாது முழுமையாக திட்டமிட்டு பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

அதே போல் எமது தோழர்கள் அனைவரும் அமைப்பை பலப்படுத்துவதற்கும், ஒழுங்குபடுத்துவ தற்கும், மக்களைத் தயார்படுத்துவதற்கும் இச்சந்தர்ப் பத்தை சிறப்பாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

அன்பார்ந்த தோழர்களே,

மக்களுக்கு மட்டும்தான் இவ்இடைவேளை என்ப தை மறந்து விடாதீர்கள்.

நாங்கள் எமது பயணம் முடிகின்ற வரை ஓய்வெ டுக்க முடியாது. இந்தக் கால கட்டத்திற்குரிய வேலைத் திட்டங்களில் எம்மை ஈடுபடுத்திக் கொள்ள வேண் டும்.

எமது மக்கள் என்றைக்கு அமைதியான சுதந்திரக் காற்றை சுவாசிக்கின்றார்களோ அன்றைக்குத்தான் நாம் ஓய்வு எடுத்துக் கொள்ள முடியும்.

என்னுயிரினும் மேலான ஈழ மக்களே,

பசி, பட்டினி, பணமின்மை, அகதிகளாக்கப்படு கின்றமை, உயிர் உடமைகள் இழப்புக்கு உள்ளாக்கப்ப டுகின்றமை என்பவற்றை நாம் ஒரு போராட்டத்தில் அனுபவிக்க வேண்டியது தவிர்க்க முடியாததுதான்.

ஆனால் நானோ, எனது தோழர்களோ மக்கள் இல்லாத மண்ணை நேசிக்கவில்லை. மக்களுக்காகத் தான் மண்ணை நேசிக்கின்றோம்.

நீண்ட எங்கள் நெடும் பயணத்தில் நீங்களும் எங்களுடன் தொடர்ந்தும் வந்து கொண்டே இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் நானும், எனது தோழர்

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



களும், எங்களின் சகோதர அமைப்புக்களும் இணைந்து இந்த இடைவேளையைத் தயார் செய்தோம்.

இந்த இடைவேளையை நன்கு பயன்படுத்திக் கொள்ளுங்கள். மீண்டும் இடைவேளை எப்போது வருமென கூற முடியாது. இடையில் மீண்டும் ஓய்வு எடுப்பதற்கு சந்தர்ப்பம் கிடைக்கலாம், கிடைக்காமலும் போகலாம்.

ஆனால் எமது இலக்கை நாம் அடையும் வரை எமது பயணம் முடியப் போவது இல்லை.

ஆனால் இதே வேளையில் நீங்கள் எச்சரிக்கையாக இருந்து கொள்ள வேண்டிய ஒரு விடயத்தையும் கூற வேண்டியவனாக இருக்கின்றேன்.

அஃது என்னவெனில் இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு ஸ்ரீலங்கா அரச பயங்கரவாதிகளும், உளவாளிகளும் உங்களுக்கு இடையில் பல்வேறு வடிவங்களில் ஊடுருவுவார்கள்.

உங்களோடு சிநேக பூர்வமானவர்கள் போல் நடித்து எங்களைப் பற்றிய செய்திகளை சேகரிப்பதற்கு முயற்சிப்பார்கள்.

உங்கள் மத்தியில் பிச்சைக்காரர்கள் போலவும், பைத்தியக்காரர்கள் போலவும், நாடோடி வியாபாரிகள் போலவும் நடமாடுவார்கள்.

உங்களுக்கு இடையே இருந்து எங்களைக் காட்டிக் கொடுப்பதற்கான தேசத் துரோகிகளை தயார் செய்து கொள்ள முயற்சிப்பார்கள்.

எனவே நீங்கள் இடைக்கால ஓய்வை எடுத்துக் கொள்ளும் இந்த நேரத்தில் எதிரிகளைப் பற்றி மிகவும் விழிப்பாகவும், உசாராகவும் இருந்து கொள்ளுங்கள்.

இந்த எதிரிகள்தான் கடந்த ஆண்டுகளில் 5,000 க்கு மேற்பட்ட எங்கள் சகோதரர்களைக் கொலை செய்தவர்கள்.

இவர்கள்தான் நூற்றுக்கணக்கான எங்கள் சகோதரிகளைக் கற்பழித்தவர்கள்.



இதே நபர்கள்தான் பல கோடி பெறுமதி வாய்ந்த எமது பொருட்களைக் கொள்ளையடித்து கொண்டு சென்றவர்கள்.

இவர்கள் இப்போது எம்மோடு நண்பர்களாக நடிக்க முற்படுவதெல்லாம் மீண்டும் எம்மைக் கொலை செய்வதற்காகவே, எமது உடமைகளைக் கொள்ளை அடிப்பதற்காகவே என்பதை எந்தக் கண நேரத்திலும் நீங்கள் மறந்து விடாதீர்கள்.

இக்கால இடைவெளியில் எதிரிகள் என்னென்ன செய்து கொண்டு இருக்கின்றார்கள் என நீங்கள் அறிவதை எமது அமைப்பின் தோழர்களிடமோ அல்லது எமது சகோதர அமைப்புக்களின் தோழர்களிடமோ உடனுக்குடன் தவறாது தெரிவித்துக் கொண்டிருங்கள்.

ஏனெனில் எமது போராட்டப் பயணம் மீண்டும் தொடரப்படுவது தவிர்க்க முடியாததாகவே இருக்கும்.

இவ்வளவு சோதனைகளுக்கும், வேதனைகளுக்கும் பின்னர் எமக்கு இடைவேளை தேவைதானா? என்று நீங்கள் கேட்கலாம்.

நான் உங்களுக்கு கூறுவது என்னவெனில், எமது சுதந்திரத்தை நாம் அடையும் வரை, சமாதானமாக வாழுகின்ற நிலையை நாம் எட்டும் வரை, எமது ஜனநாயக உரிமைகளையும், கௌரவத்தையும் நாம் நிலைநாட்டும் வரை எமது போராட்டம் முடிவடையப் போவதில்லை.

ஆனால் எமது போராட்டம் ஒரு நீண்ட காலப் போராட்டமாக அமைய வேண்டியது எம்மால் தவிர்க்க முடியாததாக இருக்கின்ற காரணத்தால் போராட்டம்-இடைவேளை-மீண்டும் போராட்டம் என்கின்ற செயல்முறையை நாம் கடைப்பிடிப்பதே எமது இலக்கை நாம் தவறாது அடைவதற்கான சரியான வழிமுறையாகும்.

நீங்கள் எங்களோடு தொடர்ந்தும் இந்தப் போராட்டப் பயணத்தில் வந்து கொண்டு இருப்பதில்

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

எந்தத் தடையும், எந்தப் பின்வாங்கல்களும் ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காகவே உங்களுக்கான இந்த இடைவேளையை நான் தெரிவு செய்து கொண்டேன்.

என் உள்ளம் நிறைந்த எத்தனையோ தோழர்களை நான் கடந்து வந்த பாதைகளில் இழந்து விட்டேன். ஆனாலும் அவர்கள் மக்களுக்காக மடிந்த மாவீரர்கள் என என் மனதை இரும்பாக்கிக் கொண்டுதான் இந்த தீர்மானத்திற்கு வந்தேன்.

5,000-க்கும் மேற்பட்ட ஈழ மக்கள் சிங்கள இன வெறி பிடித்த கொடிய மிருகங்களால் கொலை செய்யப்பட்டு விட்டார்கள் என்பது உண்மைதான். ஆனாலும் உறுதி குலையாது இன்றைய காலகட்டத்தின் தேவையை உணர்ந்து தீர்மானம் எடுக்க வேண்டியவனானேன்.

எனினும், இவ்வாறான இழப்புக்களை இதுவரை எதற்காக நாம் கொடுத்தோமோ அந்த நோக்கத்தினை அடைகின்ற வரை மனம் தளராது, உறுதி குலையாது வெற்றி வரை போராடுவோம்.

"ஐக்கியமே எமக்கு இன்று முக்கியம்."
"வாழ்க ஈழத் தேசிய விடுதலை முன்னணி."
"இறுதி வெற்றி ஈழ மக்களுக்கே."
"வெல்க ஈழ விடுதலைப் போராட்டம்."
"வாழக ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி."

இப்படிக்கு
உங்கள் தோழன்

**க. பத்மநாபா**

செயலாளர் நாயகம்
ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி

www.tamilarangam.net

-தோழர் பிடல் காஸ்ட்ரோ

எமது நாடானது சமாதானத்திற்காக உழைக்கவோ, பேச்சு வார்த்தைகள் மூலம் வேறுபாடுகளை களைவதற்கான கலந்துரையாடல்களில் ஈடுபடவோ எந்த வேளையிலும் மறுக்காது.

அதே வேளை தனது ஒழுக்க விதிகளையோ, கௌரவத்தையோ, இறைமையையோ, தனது உயர்ந்த கொள்கைகளையோ எந்தச் சந்தர்ப்பத்திலும் விட்டுக் கொடுக்காது.

மேலும், எமது நாடானது எமது பகுதியிலும் உலகிலும் நிலவுகின்ற பதட்ட நிலையை இல்லாமற் செய்வதற்கான முயற்சிகளுக்கு ஒத்துழைப்புக் கொடுக்கவும் மறுக்காது.

மனித இனத்தின் வாழ்க்கைக்கும் எதிர்காலத்திற்குமான போராட்டமானது சகல மக்களினதும் அவர்களின் தேசத் தலைவர்களினதும் தவிர்க்க முடியாத கடமையென நாம் கருதுகின்றோம்.

நமக்கு அமைதி தேவைப்படுகின்றது. அமைதியென்றால் நமது மக்களுக்கு ஒரு பாதுகாப்பான ஒளிமயமான எதிர்காலம் என்பதேயாகும். ஆனால் இவ்வமைதி என்பதை ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பாளர்களுக்கு இடமளிப்பதன் மூலமோ, சலுகைகள் கொடுப்பதன் மூலமோ வென்றெடுக்க முடியாது. ஆக்கிரமிப்பாளர்களுக்கு சலுகைகள் வழங்குவதானது ஆரோக்கியமற்ற நிலைமைகளை ஊக்குவிப்பதாகவும், அடிமைத்தளை அடக்குமுறை, சரணாகதி ஆகியவற்றிற்கு வழி வகுப்பதாகவுமே அமையும்.

--1.1.1984இன் உரையிலிருந்து

www.tamilarangam.net

தொடர்புகட்கு
ஈழ மக்கள் செய்தி தொடர்பு நிலையம்
20, பிரதான வீதி
ஜக்காரியா காலனி
சென்னை-600 094

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## தோழர் பத்மநாபா

ஈழத்தின் உழைக்கும் மக்கள் அனைவரினதும்அரசியல் தலைவனாகவும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் மத்திய கமிட்டியின் செயலாளர் நாயகமாகவும், அதன் அரசியற் பீடத்தின் தலைவராகவும், மக்கள் விடுதலைப் படையினது ஈழ மக்கள் புரட்சிகர இராணுவ ஆணைக்குழுவின் அதிபராகவும் தோழர் பத்மநாபா அவர்கள் பணிபுரிந்து கொண்டிருக்கிறார்.

1970-ம் ஆண்டுகளின் ஆரம்பத்திலிருந்து புரட்சிகர ஈழ விடுதலைப் போராட்டத்தின் பல்வேறு அனுபவங்களினாலும் புடம் போடப்பட்டு வளர்ந்தவர்.

அனைவரையும் ஈர்க்கின்ற அவரது அயராத உழைப்பும், ஓயாத சிந்தனையும், தலைமைத்துவ ஆளுமையும், உழைக்கும் மக்கள் சமுதாயத்தின் முன்னேற்றத்தில் அவர் கொண்டுள்ள பற்றுமே அவரை இன்று ஈழ மக்களின் புரட்சிகர விடுதலைப் போராட்டத்தின் வழிகாட்டியாகவும், தலைவனாகவும் ஆக்கியிருக்கின்றன.

—தோழர்கள்

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்